விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (10—9—49) வெளியூர் (11—9—49) [இதழ் 32

அடக்குமுறைக்கு "ஆலாத்தி" எடுக்காதீர்!

வேலைநிறுத்தம் - வீம்பு அல்ல, வேதனை!

மக்கள் மனமே மந்திரிகளுக்கு உரைகல்

நல்லாட்சி நடைபெற நல்ல திட்டம் வேண்டும்

அண்ணாத்துரை தெளிவுரை

[illegible]-9-49ல் பார்க்டவுன் மெமோரியல் ஹாலில், எம் எஸ் எம். ரயில்வே ஊழியர்கள் சங்க மாநாட்டில், ஊழியர்களின் மனப்போக்கு மாற வேண்டும் என்று வற்புறுத்தி, பொதுவுடைமைத் தோழர்கள் மீது, அடக்குமுறை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும்முறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிற்போக்குத்தன்மையை வன்மையாகக் கண்டித்து, அரசாங்கத்தின் பிற்போக்கை எடுத்துக் காட்டி தோழர் சி. என். அண்ணாதுரை ஆற்றிய தெளிவுரை கீழேதரப்படுகிறது.

தோழர்களே! என்னை இந்த ரயில்வே ஊழியர்கள் கூட்டத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். நேற்றும் இன்றும் மாநாடு நடந்தது. தொழிலாளர்களும், தொழிலாளிகளிடை இருந்து பழக்கப்பட்ட பலரும், இதில் பேசியிருக்கின்றனர். உங்களுக்குள்ள குறைகளைத் தீர்க்க, தீர்த்துக்கொள்ள, பரிகாரம் தேட நல்ல, தீர்மானங்கள் சில நிறைவேற்றியிருக்கிறீர்கள். சொல்லளவோடு [illegible]டும் தீர்மானங்கள் நின்று [illegible]மல், காரியத்திலும் நடைபெற வேண்டும் என்பதை, ஒரு மந்திரியாரையும் அழைத்து, உறுதிப் படுத்தியிருக்கிறீர்கள், அவர் முன்னிலையில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறீர்கள்

எனது கருத்தைக்கூற வந்தேன்

இன்று இந்த ரயில்வே ஊழியர் மாநாட்டில் பல நண்பர்கள் பேசினர். யாரும் வேறு விஷயத்தைப்பற்றி இந்தக் கூட்டத்தில் பேச வேண்டிய அவசியமில்லை. நான் இன்னும் தெளிவாகவே கூறுகிறேன். அது அவசியமில்லை என்பது மட்டுமல்ல, [illegible] நாகரிகமும் கூட என்று. எனவே இக்கூட்டத்தின் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல, நான் விஷயந்தவறி வேறு விஷயத்திற்குப் போக மாட்டேன். தொழிலாளர் பற்றியே பேசுவேன். ஆனால் ஒன்று கவனிக்க வேண்டும். நீங்கள் ரயில்வே ஊழியர்கள். ரயில் வண்டியில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் அனைவரும் ஒத்த மனத்தினர், ஒரே கருத்தினர் என்று கூறிட முடியுமா? முடியாது! வண்டியிலே திருநெல்வேலிக்கு அந்த திருச்செந்தூருக்குக் காவடி தூக்கிச்செல்லும் முருக பக்தருமிருப்பார்; பக்கத்திலே அந்த முருகப்பெருமானின் தங்கவேலை உருக்கினால் எத்தனை எத்தனை ஏழைகட்குச் சோறிடலாம் என்று எண்ணிடும் என் போன்ற நாத்திகர்களும் இல்லாமலா போவர்? அதே போல், இங்குப் பலர் பேசினர். பேச இருக்கின்றனர். எல்லோரும் ஒத்த மனத்தினர், கருத்தினர், என்று கொள்ள முடியாது, கூறிடவும் கூடாது. ரயில் வண்டியில் பலவகைப் பிரயாணிகள், பலவகைக் கருத்துக் கொண்டோர்செல்வதும்போலவே தான், இந்த ரயில்வே ஊழியர்கள் கூட்டத்திலும், பலவகைக் கருத்தினர், வந்துள்ளனர். ஆனால் பொதுக் கருத்து பற்றி[illegible]கின்றனர், தொழிலாளர் பற்றி, அவர் தம் குறைகளைப் போக்கக் கருதி. எனவே, நான் வேறு விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட மாட்டேன். இவ்விதம் குறிப்பிடுவது எவருக்கும் சுலபம், ஆனால் நடக்க முடியாது.

நேற்று இங்குப்பலதீர்மானங்கள் செய்துள்ளனர் மாநாட்டில். அவற்றில் சில எனது கருத்துக்கு முரண்பட்டிருக்கலாம். அதைப்பற்றி நான் என்னுடைய கருத்தை இங்கு கூறிடாமல் இருப்பின், எனக்கும் அத் தீர்மானத்திற்கும் என்ன தொடர்பு என்பதைப் பொது மக்களும், தொழிலாளர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இத்தகைய சிக்கலான பிரச்சினைகள் வரும் போதெல்லாம், இடையிடையே என்னையும் அறியாமல் வேறு விஷயங்களைத் தொடத் தலைவர் அனுமதிப்பார் என நம்புகிறேன்.

பிரச்சினையை யோசிக்க முடியும்

ரயில்வே ஊழியர்கள் இன்று அகில இந்திய ரீதியிலே தங்களை ஒருபெரிய கட்டுப்பாடான ஸ்தாபன முறையில் பலநாளாக மிகப்பலப்படுத்திக் கொண்டுள்ளார்கள். இன்றையதினம், சர்க்கார் எந்தத்தொழிலாளரைக்கண்டாகிலும் அச்சம் கொள்கிறது என்று கூறினால், அது ரயில்வே தொழிலாளர்களைக் கண்டுதான் என்று கூறுகிறேன். உங்கள் குறைகளை அவர்கள் கவனிக்கக் கடமைப்பட்டவர்கள். இத்தகைய பலம் பொருந்திய ஸ்தாபனத்தைச்சேர்ந்த நீங்கள், அதி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

இந்தியைக் கட்டியழும் பக்தர்களுக்கு!

சர். சி. வி. இராமன் கூறும் அறிவுரை

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி இருந்தாக வேண்டும் என்று பேசியவர்கள் நம் நாட்டில் ஒரிருவர் இருக்கின்றனர். இந்திமொழியைப் பொது மொழியாக நாமனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அது தமிழர்களால் எளிதில் படித்தறிந்து கொள்ளக்கூடிய மொழி என்றும் சிலர் தூபம்போடுகின்றனர். பெரும்பாலும் தாய்மொழியாம் தமிழைச்சரிவரப்படித்தறியாதவர்களே பலர் இந்திப் பொதுமொழி மோகத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், ஒரு நல்ல நாட்டிற்குப்-பல மொழிகளைப் பேசும் மக்கள் உள்ள நாடாக இருந்த போதிலும் சரி-பொது மொழி என ஒரு மொழி இருக்க வேண்டியது அவசியமில்லை என்கிறார் சர். சி. வி. இராமன்.

ஸ்விட்ஜர்லாந்தில் பிரெஞ்சு, ஜெர்மனி, இத்தாலி முதலிய பல மொழிகள் பேசப்பட்டுவருகின்றனவெனினும், பொதுமொழியென ஒன்று அங்குக்கிடையாதென்றும், பொதுமொழியே அந்நாட்டில் இல்லாமற் போய் விட்டபடியால், அந்நாட்டவரின் ஒற்றுமையோ, கலாசாரமோ, நாகரிகப் பண்போ, மற்றெதுவோ சற்றும் குறைந்துவிடவில்லை என்றும் 'நாம் வாழவேண்டும், பிறரையும் வாழ அனுமதிக்க வேண்டும்' என்ற கொள்கையோடு ஸ்விட்ஜர்லாந்து நடந்து கொள்கிறபடியால் உலக நாடுகளிடையே அது அந்தஸ்துமிக்க நாடாகவே விளங்குகிறதென்றும் சர் சி. வி. இராமன் கூறினார்.

சர் இராமன் கூற்று அ.நி. சபையினர் செவிகளில்ஏறுமா? ஆனால், அ.நி.சபையில்இந்திப்பொதுமொழியாகவேண்டும் என்று வற்புறுத்தும் வடநாட்டார்கள் மொழிமூலம் பிற மாகாணங்களைச்சுரண்டி அடிமைப் படுத்தி உல்லாசவாழ்வு வாழலாம் என்ற கருத்துடன் வேலை செய்கின்றனர்.

என்னதான் தமிழர்கள் இந்தியைப் படிப்பதென்றாலும் 100 ஆண்டுகளாக ஆங்கிலத்தைப்படித்து 100-க்கு 6 பேர் ஆங்கிலம் படித்தவர்களாக ஆனதுபோல், இந்தியைப் படித்தவர்களும் அந்தக்கால அளவில், அதே அளவுக்குத்தான் வந்து சேரமுடியும். அதனால், பொது மொழி கற்றவர்களே பதவியில் ஏற வேண்டும் என்ற விதிபிறந்து, கேந்திரப்பதவிகளனைத்தையும் இந்தியையே தாய்மொழியாகக்கொண்ட வடநாட்டார் (ஆங்கிலேயர் செய்ததுபோல) கைவசப்படுத்திக் கொண்டு, பிற மொழி மக்களைச் சுரண்டிச் சுகபோகவாழ்வு நடத்துவர்.

இந்த உண்மையை நன்கறிந்தும், ஆங்கிலேயர்க்குத்துணை போனவர்கள் சிலர் இருந்ததைபோன்று, இந்தியைப் பொது மொழியாக்கும் கூச்சலிலும் நமமவர்கள் கலந்து கொண்டு, சுயநலத்தைப் பெரிதாகக்கருதி, இந்தியே பொது மொழிக்கு ஏற்ற மொழியெனக் கூறித்திரிகின்றனர். உண்மையிலேயே இவர்கள் நாட்டுப்பற்றுடையவர்களானால், சர். சி. வி. இராமன் எடுத்துக்காட்டிய உண்மையை உணர்ந்து, இந்தப் பொதுமொழிப் பிரச்சினையையே கைவிட்டுத் தலைமுழுகித்தொலைப்பர். ஆனால் நாட்டு முன்னேற்றமும் மக்கள் முன்னேற்றமும் உள்ளத்தில் உறுத்தினால் அல்லவா இவ்வாறுநடந்துகொள்ள முடியும்?

ஏன் இந்த ஏற்பாடு?

மாவட்ட நீதிபதியின் அந்தஸ்து மாவட்ட கலெக்டருக்கும் இருக்க வேண்டுமென்பதற்காக, கலெக்டரின் துவக்கச் சம்பளத்தை ரூ1000 மாக அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. இதுவரை இந்தச்சம்பளம் ரூ. 800 ஆக இருந்தது. இந்த இரு பதவிகளும் சம அந்தஸ்துடையவைகளாயிருத்தல் வேண்டுமெனில், இருபதவிகளுக்குமுரிய சம்பளத்தையும் ரூ.800 ஆக்கிவிடலாமல்லவா? ஏன ஆயிரமாக்கவேண்டும்? இதன் அதிகப்படி சம்பளமும் 1500 ரூபாயுடன் நிற்கலாம். ரூ. 1800-ம் ரூ. 2500 மாகப் பெரிதாக்க வேண்டியதில்லையே! இவ்வாறு உயர்ந்த சம்பளம் பெறுவோரின் சம்பளவிகிதத்தைக் கூட்டுவதைவிட, குறைந்தபட்ச சம்பளக்காரர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தினால், அவர்கள் வயிறாரச் சாப்பிடவேணும் வழி பிறக்குமல்லவா?

பெரிய சம்பளக்காரர்களின் சம்பள விகிதத்தைப் பெருக்குவது, நாடு சுதந்தரமடைந்தபிறகு, சிறந்த செயலாகத்தோன்றவில்லை! கூடியவரை சென்னை மண்டலத்தில் அதிகப்பட்சமான சம்பள விகிதமே ரூ 2000-க்கு மேல் போகாமல் இருக்குமாறும், குறைந்தபட்ச சம்பளம் ரூ. 100-க்குக் குறையாதபடி இருக்குமாறும் வசதி செய்வதுதான், மக்களின் வாழ்க்கைத்தரத்தை [illegible] பட்டினியில்லாத [illegible]

உணவுப் பொருள் கொள்முதல்

வெற்றி ஏற்படாமற் போவதேன்?

உணவுப் பஞ்சத்தைப் போக்கி உணவு விநியோகக்கொள்கையை வெற்றியுடையதாக்கும் வேலை, மாகாணங்கள் கொள்முதலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதைப்பொறுத்துள்ளது என்று, மத்திய அரசாங்க உணவுக் கமிஷனர் தோழர். ஆர். கே. படீல் பேசியுள்ளார்.

உணவுக் கொள்முதலை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்க வேண்டுமென்னும் துறையில் அரசாங்கம் ஒழுங்கான முறையைக் கையாளுமாயின், அதில் தோல்விக்கு இடமேயில்லை. எவரும் அரசாங்கத்திற்கு விளைவுப் பொருளை அளிக்காமல் பதுக்கி வைத்துவிட முடியாது.

ஆனால், கொள்முதல் நடத்தும் இலாக்காவின் திறமைக் குறைவினாலோ, அல்லது அக்கறையற்ற செயலாலோதான் இதில் தோல்வி ஏற்படுகிறது.

நாட்டிலே எவ்வளவு நிலங்களில் நெல் விளைகிறதென்பதை அரசாங்கம் நன்கு அறியும்.

வரி வசூலிப்பதற்காக அரசாங்கம் எடுக்கும்கணக்கில், நன்செய் - புன்செய்பற்றிய புள்ளி விவரங்கள் இல்லாமலில்லை.

இந் நிலையில், யார் யாருக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பது, அரசாங்கம் நன்கறிந்த விஷயமே. ஒவ்வொரு ஊர் கிராம முன்சீப்பும் தக்கபடி நடவடிக்கை எடுத்துக் கொண்டால், யார் யார் வீட்டு நிலங்களில், எவ்வளவுவிளைந்தது என்ற கணக்கு எளிதில் கிடைத்துவிடும். அதன் பிறகு கொள்முதல் செய்வது அத்துணைக்கடினமான விஷயமன்று. நேர்மையான முறையைக் கைக்கொண்டவர்களுக்கு, இவ்வகையில் கொள்முதல் செய்ய இறங்கினால் தோல்வியும் ஏற்படாது!

மாலை மணி

சென்னை 10—9—49 சனிக்கிழமை

ஜன நாயகம் தூக்கிலிடப்படுகிறது!

தமிழ்நாட்டில் ஜில்லா போர்டு தேர்தல்கள் முடிந்து விட்டன. தென் ஆற்காடு, திருச்சி ஜில்லாக்கள், தமிழ்நாடு காங்கிரஸ் சர்வாதிகாரிகளுக்கு, நல்ல பாடம் கற்பித்திருக்கின்றன. 'அந்தப்' படிப்பினையைக் கண்டு காங்கிரஸ் கோபப்படுகிறதேயன்றி, அதன் பொருள் உணர்ந்து, எதிர்காலத்திலாவது, அதே தவறை செய்யாமல் இருப்போம் என்று தீர்மானம் கொள்ளவில்லை.

தென்னாற்காடு ஜில்லா தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு, சில இடங்களில், தங்கள் வெற்றிக்காக 'ஜாதி' வேற்றுமைகளைச் சிலர் சாதகமாக்கிக்கொண்டது வெட்கக்கேடானது என்றும், நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு இது முட்டுக்கட்டைப்போடக் கூடியதென்றும், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் குழு தீர்மானம் ஒன்றை, நிறைவேற்றி இருக்கிறது. மற்றவர்களுக்குப் போதிக்கமுன் வந்த தமிழ்நாடு காங்கிரஸ், இது விஷயத்தில், எந்த அளவு நேர்மையாக, 'ஜாதீ'ய உணர்ச்சியில்லாமல், நூற்றுக்கு நூறு தேசீயப் பண்போடு, இந்தத் தேர்தலில் நடந்துகொண்டது என்பதை அனைவரும் கவனித்தாகவேண்டும்.

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு, அரசியல் கட்சிகளின் பெயரால் தேர்தலில் போட்டியிடுவதே கூடாது, என்ற நேர்மையான முறையை காங்கிரஸ் மேற்கொண்டிருக்கவேண்டும். இந்த நியாயத்தை காங்கிரஸ் மறந்துவிட்டு, ஜில்லாபோர்டு தேர்தலில் அரசியல் கட்சி பெயர்கூறி போட்டியிடப் புகுந்தது முதல் குற்றமாகும்.

இன்னின்ன சிறப்புகளை உடையவர்களைத்தான் காங்கிரஸ் அபேட்சகர்களாகப் பொறுக்கவேண்டும் என்ற ஒரு நியதியை ஏற்படுத்திக்கொண்டு, எல்லா இடங்களிலும் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில், அந்த நியதியைக் கண்டிப்பாக அமுல் நடத்தவேண்டுவது முறையாகும். ஜாதி—பணபலம்—செல்வாக்கு பலம்—முதலிய விஷயங்களைக கருதிப் பார்க்காமல், பொறுக்கப்படும் அபேட்சகர், காங்கிரஸ் கொள்கைகளில் உறுதியான நம்பிக்கையுடையவர் தானா; நீண்ட காலமாகக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்து, காங்கிரசுக்குக் களங்கம் ஏற்படுத்தாத முறையில் சேவை செய்து இருக்கிறாரா; பணம் தேடும் பேராசையும், பதவிக்குப்பல்லிளிக்கும்போக்கும் இல்லாதவராக இருக்கிறாரா; தேர்ந்தெடுத்தபின்னர் காங்கிரஸ் கட்சியின் கோட்பாடுகளை — ஏதாவது இருந்தால் — மறந்து சுயநல வேட்டையாட முனைந்துவிடாமல் இருப்பாரா என்பது போன்ற பிரச்னைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, முடிவாக காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்கி இருக்க வேண்டும். இந்த முறைகளைத்தான் அபேட்சகர்களைப் பொறுக்கும விஷயத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கையாண்டது என்று, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் அவர்களே கூடக் கூறத் துணிவு கொள்ளமாட்டார்.

தியாகம், சேவை, என்ற இரண்டு இலட்சணங்களும் பொருந்தி இருப்பவர்களைக் பார்த்துப்பார்த்து, அபேட்சர்களாகப் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று, சட்டசபை உறுப்பினர்களாகப் பதவி பெற்ற பின்னர், சாதாரண மக்களைக்காட்டிலும், மட்டரகமாக நடந்துகொளவதை அனுபவவாயிலாக அறிந்து மற்றவர்கள் பரிகசிப்பது ஒருபுறமிருக்க, சொந்தக்கட்சியினரே சோகக் குரல் கிளப்பவேண்டிய நிலையல்லவா ஏற்பட்டு இருக்கிறது? தியாகத் தீயில புடம் போட்டு எடுக்கப்பட்டபத்தரை மாத்துத் தங்கக் கட்டிகளே, நாளாவட்டத்தில் வெறும் பித்தளையாக மாறி வருகிறபொழுது, மறுபடியும் மறுபடியும், அபேட்சர்களைப் பொறுக்குவதற்கு, அந்தத் தியாகத் துலாக் கோலை மேற்கொள்வதில் பயனேதும் ஏற்படப் போவதில்லை என்று தோழர் காமராஜர் தீர்மானித்துக்கொண்டார் போலும்! செய்த தியாகத்திற்குப் பரிசு வழங்கிவிட்ட பிறகு, மேலும் மேலும் ஏன் தியாகிகளுக்கே சலுகை காட்டவேண்டும் என்று எண்ணிவிட்டார் போலும்! இல்லையானல், வேறு முறையை, மக்கள் முன்னேற்றத்தைக் குலைக்கும் முறையை, நீதி நேர்மை இல்லாத பிற்போக்கான முறையை, தோழர் காமராஜர் மேற்கொண்டதற்கான காரணந்தான் என்ன?

எந்தெந்த வட்டாரங்களில், எந்தெந்த ஜாதியினரின் தொகை கூடுதலாக இருக்கிறதோ, அந்தந்த இடங்களில் அந்தந்த ஜாதியினரிலேயே ஆட்களைத் தேடிப் பிடித்து, பிரத்தியேகமாக இதற்கென்றே நெசவு செய்த கனத்த கதர் துணியில் குல்லாய் தைத்துப்போட்டு, தேர்தலில் தாராளமாகச் செலவிடத் தேவையான அளவிற்குப் பணம் இருக்கிறதா என்று பார்த்து, கள்ளமார்க்கட்டில் கைதேர்ந்தவர்களாக இருந்தாலும் பாதகமில்லை என்று தீர்மானித்துக்கொண்டு, பெருவாரியானவர்களைப் பொறுக்கி யெடுத்து, 'காங்கிரஸ் அபேட்சகர்' என்ற முத்திரையைச் சூட்டி, தேர்தலில் போட்டியிடவில்லை என்று தோழர் காமராஜர், உறுதியாகக் கூற முன்வருவாரா? தேசீயம் தேசீயம் என்று பேசிவந்தவர்—வருபவர், தேசீய பண்பாட்டின் பாதுகாவலர் என்ற பட்டம் சூட்டிக்கொண்டு இருப்பவர்—போக்கே, அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதில் 'ஜாதி' உணர்ச்சி ஒன்றையே முதன்மையானதாக முக்கியமானதாகக்கொண்டதாக இருக்கும்போது, காங்கிரசின் சர்வாதிகாரப் போக்கை எந்த வகையிலும்முறியடிக்கவேண்டுமென்று சங்கல்பம்செய்துகொண்டிருக்கிறவர்கள் 'ஜாதி' உணர்ச்சியை, தேர்தலில் தங்களுக்குச்சாதகமாக்கிக்கொண்டதில், தோழர் காமராஜர் என்ன குற்றத்தைக்கண்டார்?—காணக்கூடும்?

மறைந்துவரும் 'ஜாதி' உணர்ச்சி, மறுபடியும் தலைதூக்குவதற்கு, தோழர் காமராஜரும் அவர் தலைமை தாங்கியுள்ள காங்கிரசும், மக்களின் நல்வாழ்வை மறந்து, ஒரு கட்சியின் ஆகக்கதிற்கு மட்டும் எதேச்சாதிகாரபோக்கைமேற்கொண்டிருப்பதுதான் காரணம் என்னும் உண்மையை, காங்கிரசின்போக்கைத் தெரிந்தவர்கள் நன்கு அறிவர். நாடு நலிந்தாலும், மக்கள் வாழ்வு மங்கினாலும்நஷ்டமில்லை, காங்கிரஸ் கட்சிக்கு, வெற்றிமட்டும் கிடைத்தால் போதும்,- அதுவும் அவசியம் இல்லாத இடங்களில்கூட- என்ற முடிவின்மீதுதான், தமிழ்நாடுகாங்கிரஸ், ஜில்லா போர்டு தேர்தல்களில தலையிட்டது. வெற்றி பெறுவது ஒன்பதையே குறிக்கோளாகக் கொண்டதால், எந்த சாதனத்தைக்கொண்டாவது வெற்றி மட்டும் பெற்றுவிடவேண்டும என்ற முடிவினமீது, 'ஜாதி'யைக் கூறவேண்டிய இடத்தில், அதே 'ஜாதி'யைச் சேர்ந்தவர்களாகப் பார்த்து அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்த முறை, மற்றவர்களும் வெற்றி பெற வேண்டுமானல் அதே 'ஜாதி'யை மேற்கொண்டால தான் வெற்றி சுலபமாகும் என்ற நினைப்பை, மற்றவர்களுக்கும் கொடுத்துவிட்டது. எனவே, ஜனநாயக உணர்ச்சி உடையவர்கள் கூட, தேர்தலில் இலகுவாக வெற்றிபெறுவதற்கு 'ஜாதி' உணர்ச்சியை தங்களுக்குச் சிறந்ததோர் சாதனமாகக் கொண்டனர். 'ஜாதி' உணர்ச்சியை உருவாக்கும் பணிபுரியும் போதகாசிரியர்கள், அவர்களின் பாடபோதனையை, அவர்களிடம் பயின்ற மாணவர்கள், கற்றுக்கொடுத்த குருநாதர்களிடமே, பரிட்சித்துப் பார்க்க, இந்தத் தேர்தலில் முனைந்தனர். குறிப்பிடத் தகுந்த அளவிற்கு வெற்றியும பெற்றுர்கள். இதனைக் கண்டு, தேசீயப்போர்வையில் 'ஜாதி' உணர்ச்சியை பயன்படுத்திவந்த காங்கிரஸ், அதே 'ஜாதி' உணர்சசியை மற்றவர்கள் வெளிப்படையாக முன்தள்ளி பயன்பெறுவதைக்கண்டதும், கோபிக்கிறது-'ஜாதி' உணர்ச்சியை பயனபடுத்தக் கூடாது என்று போதனை செய்யக் கிளம்புகிறது. தாம் கைவிட மறுக்கும ஒன்றை மற்றவர்கள் மட்டும் விட்டொழிக்கவேண்டுமென்று காங்கிரஸ் விரும்புகிறது. விருப்பம்மட்டும் போதாது. செயலளவிலும் ஜனநாயக வளர்ச்சிக்குத் தக்கது செய்ய வேண்டும். இல்லையானல், இந்த நாட்டில் ஜனநாயகத்தைத் தூக்கிலிட்டுக் கொன்ற பெருமை காங்கிரசைத்தான் சாரும்.

கோவை "கோபால் பாக்"கில்

பாரதி விழா

11—9—49 ஞாயிறு மாலை கோவை 'கோபால் பாக்'கில் நடைபெறும் பாரதி விழாவில்,

தோழர்கள், வ. ரா., பரலி நெல்லையப்பா, அண்ணாத்துரை ஆகியவர்கள்

சொற்பொழிவாற்றுவார்கள்.

கலையுணர்ச்சியா! அதில்கண்ணியம்வேண்டும்!

சிறந்த சினிமாப் படத்துக்குத் தக்க பரிசு வழங்குவதுபற்றிச் சென்னை அரசாங்கம் யோசித்து வருவதாக, சென்னை நிதி அமைச்சர் சென்னை ஓவியக்காரர்கள் கூட்டத்தில் பேசினர்.

பரிசு தருவதன் மூலம் சினிமாக் கலை வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் முயற்சி பாராட்டக்கூடியதுதான். ஆனல் புராணக்கதைகளையே சினிமாப் படம் எடுக்கும் கலையாகவளர்ப்பதற்குப் பரிசு தருவதைவிட, அக்கலையே வளராமல் தடைசெய்வதற்கு முயற்சி செய்வது நாட்டுக்கு நன்மை செய்வதாகும்.

சினிமாக் கலை வளரப் பரிசு தருவதென்றால் :—

சினிமாப் படக்கதை புதிதாய்க் கற்பனை செய்யப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

அக்கதை பார்ப்பவர்கள் மனதைக் கவர்வதுடன், நல்லொழுக்க நன்னெறிகளைக் கற்பிப்பதா யிருத்தல் வேண்டும்.

நாட்டுப் பற்று, மொழிப் பற்று, சமுதாய சீர்திருத்தம், பொதுநலத் தொண்டு, மனித இனக்கோளாறுகளை நீக்கிப் பண்படுத்தும் திட்டங்கள், ஏற்றத்தாழ்வின்றி மனிதர் யாவரும் சரிநிகர்சமமாய் நல்வாழ்வு வாழ வழி காண்பிப்பது போன்ற நற்கருத்துக்களை ஊட்டுவதாக அமைந்திருக்க வேண்டும்.

இவற்றுடன், படப்பிடிப்பு ஒலிப்பதிவு, இசை, நடனம், அலங்காரம் முதலிய அருங்கலை விஷயங்களிலும் நல்ல கவனம் செலுத்தி முதற்தரமான படமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்ஙனமின்றி. அருங்கலைகள் விஷயத்தில்தக்க கவனம்செலுத்தி, கதை எந்நன்மையும் பயக்கமுடியாததாய் அமைந்து பயனில்லை.

எனவே, பரிசுதர முயலும் அரசாங்கம், எல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து எல்லா வகையிலும் சிறந்த இடம்பெறும் படங்களுக்கே பரிசுதருவதென்றால், உண்மையில், பல நல்ல படங்கள் வெளிவருதல்கூடும். அப்படிக்கின்றி, தாட்சணியம், மேலிடத்துச் சிபார்சு, அந்தஸ்து முதலியவைகளில் அரசாங்கம மனத்தைச் செல்லவிடுவதாயிருந்தால் இப்பரிசுத் திட்டம் சிறு அளவும் பயன்படாது பாழாகிப் போகும் என்பதில் ஐயமில்லை.

இனி நடப்பவை

சென்னை:— பாபுஜி நினைவுக் கழகம்- 11—9—49-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு, "நம கடன் என்ன?" என்னும தலைப்பைப்பற்றி மாணவர்கள் சிலர் சொற்பொழிவாறறுவார்கள். இடம் 60 எண் அஷ்ட புஜம் ரோடு, வேப்பேரி.

* * *

குடந்தை:—தோழர்கள் அன்னதானம்—ராஜம்மா திருமணம் 16-9-49 காலை 9 மணிக்கு, குடந்தை மருத்துவர் வீதில் தோழர் திருக்குறள் முனுசாமி அவர்கள தலைமையில் நடைபெறும.

* * *

சென்னை — தோழர்கள் எம். ஏ. எஸ். மணி—அன்னபூரணி திருமணம் பல்லாவரம் மலங்கானந்தபுரத்தில் 11—9—49 ஞாயிறு காலை 9-மணிக்குத் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை — தோழர்கள் எம். எஸ். மணி—தேவகி திருமணம் 11-9-49 ஞாயிறு காலை 8-மணிக்கு மயிலாப்பூர் தலையாரி வீதி 16-வது எண் இல்லத்தில் தோழர் ஏ. சி. பாலசுந்தரம் பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஸ்ரீ பால், கே. கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

மாலை நிகழ்ச்சி

மாலை பாராட்டுக் கூட்டம் 5-மணிக்கு குறள் நடிகர் குழுவின் சார்பாக நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்தினம, இரா. செழியன், என். வி. நடராசன, கே. கோவிந்தசாமி ஆகியோர் பேசுவார்கள்.

கண்ணப்பநாயனர் கழகம் பெற்றோர் நாள் விழா.

சென்னை, செப், 7.— இராயபுரம் கண்ணப்ப நாயனர் கழக உயர்தர ஆரம்பப் பள்ளியின் பெற்றோர் நாள் விழா, 7-9-49மாலை 6 மணிக்கு நடை பெற்றது. சென்னை மாவட்டக்கல்வி அதிகாரி தோழர் ஆர். நாசிம்மலு தலைமை வகித்தார். தோழியர் குட்டிமாளு அம்மாள் எம். எல். ஏ., கௌரவ காரியதரிசி தோழர் எல். சீனிவாசன் பி. ஏ. கோவை வித்துவான் தோழர் கா. துரைசாமி, தோழர் சர்மா, ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பொதுச் செயலாளர் தோழர் எம். கே. ஆறுமுகம் அவர்கள் கழக இருபது ஆண்டு வளர்ச்சியை விளக்கி, நன்றி கூறினர்.

திருப்தி-மகிழ்ச்சி-பேதமற்ற வாழ்வு வேண்டும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

...க் கண்ணீர். அவன் வேதனைப் புயல், விம்முதலின் எதிரொலி. வேலை நிறுத்தம் — வீட்டிற்குள்ளே சென்றால் பசி வேதனை! வெளியே சென்றால் அடக்குமுறை அச்சம்! வீட்டிற்குள்ளே தரித்திரம்! வெளியே அடக்குமுறை தர்பார்! என்ற நிலை, நாட்டில். எனவே நெருப்போடு, விளையாட, தொழிலாளி பொறுப்பற்றவனல்ல! விளையாட்டுக்கு அல்ல வேலை நிறுத்தங்கள். வேதனையின் கீதம், விம்முதலின் எதிரொலி என்பதைச் சர்க்கார் உணர வேண்டும். அதைவிடுத்து "வேலைநிறுத்தம் செய்யாதே" என்ற வீண் உபதேசத்தோடு மட்டுமிருந்தால், அவர்களின் ஊழல்கள் மறைக்கப்படாது போகும் என்பதுமட்டுமல்ல, நிச்சயம் தங்கள் முயற்சியில் ஏமாற்றமடைவார்கள் என்பது மட்டுமல்ல நிச்சயமாக நேர்மாறான பலனைத்தான் காண்பர் என்பது உறுதி.

'மாஸ்கோ' பாப பூமியா?

வேதனையைப் போக்க வழி வகுக்க வேண்டும். அது நீதி நேர்மையுங்கூட. அதை விடுத்து, வேலை நிறுத்தம் செய்யாதே அப்படிச் செய்தாலும் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்தின் கீழேயிருந்து வேலை நிறுத்தம் செய்யாதே! ஏன் என்றால் அவர்கள் "மாஸ்கோ பக்தர்கள். உங்களை மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்லப் பார்க்கிறார்கள் ஏமாறாதீர்கள்" என்று பேசுவதில் பயனுமில்லை, குணமுமில்லை, பொருத்தமுமில்லை.

"மாஸ்கோ"—மகத்தான வார்த்தை. இது எப்போது 'பாப பூமி'யாகிவிட்டது என்று எனக்குப் புரியவில்லை. பண்டித ஜவஹரின் முன்னாள் பெய்சிபூர் பேச்சு மாஸ்கோ மணத்தை எத்துணை வசீகரமாகக் காட்டியுள்ளது என்பது என் நினைவில் நன்றாக இருக்கிறது.

மாஸ்கோ— மகிழ்ச்சியின் சின்னம்— ஜாதியில்லை, பேதமில்லை, பிணக்கு இல்லை- முதலாளி, தொழிலாளிப் போராட்டமில்லை- தொழில்வளம் நிறைந்த பூமி- பணக்கார அமெரிக்கா தேசம்கூட நடுங்கும் அளவுக்கு, நல்லநிலையிலே உள்ள நாடு- என்றெல்லாம் நீங்களே கூறியிருக்கிறீர்களே, அதை எப்படி மறப்பர் மக்கள். மாஸ்கோவை மறந்தாலும், அதன் மணத்தை- எப்படி மறப்பர் மக்கள் என்று கேட்கிறேன்.

வேலை நிறுத்தம் கூடாது -என்று பாடினால் போதாது

இத்தகைய பொது உடைமை பயத்தையும் — வேலை நிறுத்தம் செய்வது பாபம் என்ற போதனையையும் மட்டும் தொழிலாளர் குறைக்கு மாற்றாக, மருந்தாகக் கொள்வதை விடுத்து—வாழ வழி காட்டவேண்டும், வகையான திட்டங்கள் தீட்டவேண்டும். அதைச் செய்யாது 'மாஸ்கோ' பக்கம் போகாதே—வேலைநிறுத்தம் செய்யாதே என்று பாடினால்மட்டும் போதுமா? 'மாஸ்கோ' வேண்டாமென்று கூறும் அதே சமயம் 'டெல்லி' பக்கம் மக்களைத் திருப்பி விடுகிறீர்கள். டெல்லியாவது திருப்திகரமாக இருக்கவேண்டாமா? திருப்திதரும் திட்டம் எங்கே? இல்லையே ஆட்சிபீடத்தில்.

திருப்தி, மகிழ்ச்சி, பேதமற்ற வாழ்வு—இருக்கும் இடம் எதுவானாலும் காட்டுங்கள்—போகத்தயார் —அது மாஸ்கோவானாலென்ன— வேண்டியது திருப்தி, வேதனை விம்முதலற்ற வாழ்வு! இவ்வித பூமி எதுவானாலும், போகத்தயார்- ஏன், சுயமரியாதைக்காரனாகிய நான்கூட காசிக்குப்போகத் தயார், 'காசிக்குச் சென்றால் மக்கள் கவலை தீரும்' திருப்தியோடு வாழ வழி பிறக்கும் என்ற நிலை இருந்தால்! அதுதானே இல்லை!

சர்வாதிகாரப் போக்கு

ஜனநாயக முறைக்குப் புறம்பாக, தாய்நாட்டுக்குத் தர்மகர்த்தாக்கள் என்று தருக்குடன் பேசுகின்றனர் —இந்த மனப்போக்கு தவிடுபொடியாகும் காலப்போக்கில்!

தாங்கள்தான் ஆண்டவன் பிரதிநிதிகள் என்றும், தங்களுக்கே ஏகபோக உரிமை உண்டு என்றும், தமக்கே ஆளத் தெரியும் என்றும், தம்மால் எத்தகைய திட்டத்தையும் தீட்ட முடியும் என்றும், ஆணவபேசி தீட்டிய திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீர்வோம் என்ற சர்வாதிகாரப்போக்கும் கொள்வதுதான் இன்று தாண்டவமாடுகின்றது. குற்றம் கூறுவோர்சாக்கைகள் —கூறுகிறார் இப்படி மந்திரி கனம் காட்கில். எப்படி ஜனநாயக சர்க்கார் போக்கு? குறை காண்பது குற்றமாகுமா? பொறுப்புணர்ந்து வேலை செய்யுங்கள்— உங்கள் போக்குதவறு—திட்டத்தில் ஓட்டை, உடைசல்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டக் கூடாதாம். பின் யார்தான் சுட்டிக்காட்டுவது- எடுத்துரைப்பது, குற்றங்குறைகளை இது என்ன இராம இராஜ்யமா? அவதார புருடர்கள் ஆட்சிசெலுத்துகிறார்கள், அதிலேதும குற்றங்குறைகள் இருக்கா, என்று வாளாயிருக்க அல்லது இராவண தர்பாரா? திறமை சாலிகள் இ[illegible]ர், கு[illegible]மிருக்காது என்று ஆக்காவது மகிழ! இல்லையே! இப்போது நடப்பது நேற்றுச் சட்டத்தை மீறிச்சிறை சென்ற தியாகிகள் நடத்தும் கோலாகல ஆட்சி தானே! ஜனநாயக ஆட்சியா இது?

ஹிட்லர் முறை

இத்தகைய நற்போக்குக்களையெடுத்துச் சொல்வோர் கட்சியைச்சேர்ந்தவர்களானால் கட்சிப் பூசலால் ஏசுகிறான் என்கின்றனர். கட்சியற்றவன் பேசினால் உதிரிகள் என்று உதாசீனம் செய்யப்படுகின்றனர். படித்தவர்கள், போராசிரியர்கள் எடுத்துக் காட்டினால் "உனக்கேன் இந்த வேலை—கல்லூரியோடுகிட" என்று அச்சமூட்டுகின்றனர். இஸ்மாயில் சொன்னால் 'பாக்கிஸ்தானுக்குப் போ', டாக்டர் ஜான் சொன்னால் 'ஜெருசலத்திற்குப் போ" திராவிடர் கழகம் சொன்னால்—"உனக்கு இடமே கிடையாது" என்பது; பொது உடைமைக் கட்சியினர் கூறினால், "மாஸ்கோ தாசன்" என்றசொல்; ஜயப்பிரகாஷ் நாராயண் கூறினால், "டில்லிக்குள் (மந்திரி சபை)ளே புக முயற்சிக்கிறான்" என்ற தூற்றுதல்; சரத் சந்திரபோஸ் கூறினால் "சுபாஷ் எங்கே— கொண்டு வா" என்று; இப்படியாக யார் யார் எதை எதைக் கூறினாலும், குறையை யெடுத்துரைத்தாலும் அவர்களை யெல்லாம் இழித்தும் பழித்தும் கேலியும் கிண்டலும் செய்தும், தூக்கி எறிந்தும், தூற்றியும், அச்சுறுத்தியும், அவமானம் செய்தும் வாயடைக்கிறார்களே அரசாங்கத்தார்! இது முறையா? சரியா? நீதியா? நேர்மையா? ஆகுமந்தானா? கேட்கிறேன். சொல்லுங்கள்!

இம்மாதிரி யார் செய்தது தெரியுமா? ஹிட்லர்—ஜெர்மன் நாட்டு சர்வாதிகாரி ஹிட்லர் செய்தான், வீரமாக. நீ தேசியப் போர்வையில் அத்தனையையும் நடைமுறையில் நடத்திக்காட்டிக்கொண்டிருக்கிறாயே! சர்க்காரை எதிர்க்கவோ குற்றங்காணவோ கூடாது என்று சர்வாதிகாரம் செய்கிறாய்!

மக்கள் மனமே உரைகல்

சர்க்கார் போக்கு தவறு என்று சொல்வது கடமை என்று கொண்டு 'கூறுவோர் வார்த்தையை நீ ஏற்பதில்லை உதாசினப்படுத்துகிறாய் — எல்லாம் தெரியும் எனக்கு என்று அலட்சியப்படுத்துகிறாய, 'ஆரடா நீ சொல்ல' என்று. இதிலே கண்ணியவான்கள்- விலகிக்கொள்கின்றனர். அச்சம் கொள்வோர் கோழைகளாகின்றனர். துணிவுடன பணியைத் தொடர்ந்து செயவோர் தண்டிக்கபபடுகின்றனர் உன்னால்.

ஜனநாயக சர்க்காரிலே மக்கள் மனம்தானே சர்க்காருக்கு உரைகல் இதைத் தடுக்கிறாயே! சரியா?

ஒரு நகைக்கடைக்குப் போகிறோம, நகை ஒன்று வாங்குகிறோம். நகை சரியான மாற்று உடைய தங்கமா? என்று சரிபார்க்க விரும்புகிறோம். அப்படி ஒன்றும் பார்க்க வேண்டியதில்லை. எம் கடையில் எல்லாம் சரி என்று வாதாடுகிறார் கடைக்காரர். சந்தேகம் கொண்டு எதிர்க் கடையில் சரிபார்த்துத் தரக் கேட்கிறீர்கள்

மாற்று சரியாஎன்று பார்க்காதே-கேட்காதே - சரியாகத்தான இருக்கும் நம்பு—மற்ற எவரைக் கேட்டாலும் குற்றம் சொல்வார் — கேட்டுப்பார் — தெரியும் என்று கடைக்காரன் கூறுவதற்கும் "எங்களால்தான் நல்லாட்சி நடத்த முடியும்-எங்களை நம்புங்கள்-குறை காண்பது குணமாகாது-காக்கைகள் வேண்டாம-அன்னங்களே தேவை என்று ஆட்சிப்பீடம் பேசுவதற்கும் என்ன பேதம், இருக்கிறது?

நான் கேட்கிறேன்-நாட்டு மக்களன்றி-தொழிலாளர்களன்றி மற்றுக் கட்சிக்காரர்களன்றி வேறு எவர்தான் உங்களைத் திருத்துவது? இந்தப் பிரச்னைகளை யார் கவனிப்பது? கிருபானந்தவாரி கவனிப்பாரா? அண்ணங்கராச்சாரியார் அலசுவாரா? தம்பிரான்கள் கவனிப்பாரா? சங்கராச்சாரியார் சிந்திப்பாரா? யார் கவலைகொள்வர், எம்மையன்றி, தொழிலாளர்களையன்றி?

சங்கராச்சாரியார் முதலியோருக்கு, ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றிய சிந்தனைதான் இருக்குமே ஒழிய, நம் போன்ற பாமர மக்கள் நல்லநிலைக்குப் போகவழிகாட்டும்படி சர்க்காருக்குச் சொல்ல நேரமில்லை, நினைப்புமில்லை! ஒரு திட்டம் சர்க்கார் தீட்டினால், அதை மக்கள்முன் வைத்துப் பரிசீலிக்கச் சொல்லி யோசனைகள் கேட்டுப் பின் தீர்மானிக்கவேண்டும். அவ்விதமில்லையே! இன்று ஆள்வது ஒரே கட்சி. மெம்பர்கள் தூங்காமலிருந்தால் சட்டசபையில் சட்டம் நிறைவேறுவது நிச்சயம் என்ற நிலையிலே உள்ள கட்சி, இந்தியா முழுதும் பரந்த கட்சி, நல்லவர்கள், தியாகிகள் என்ற பட்டயம் பெற்றவர்களின் கட்சி, ஆள்கிறது!

மனித உரிமையான ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களான கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, கிளர்ச்சி உரிமை இவையாவற்றையும் பறிக்கிறது. இந்த உரிமைகளோடு தொழிலாளருக்குவேலை நிறுத்தஉரிமையும் நிச்சயம்தேவை. அதிலும் அரசாங்கம் தலையிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட புத்தகத்தில் தீய எண்ணங்களைத் தூண்டக்கூடிய, புகுத்தக்கூடிய விஷயங்களோ அல்லது சர்க்கார் போக்கைக்கண்டிக்கும் குறை கூறும் பகுதிகளோ இருப்பின்சர்க்கார் அத்தகைய புத்தகங்களுக்கும் பகுதிகளுக்கும் பதில் கூறும வகையில், அல்லது நல்லெண்ணங்களைத் தூண்டும் முறையில், குறைகளைத் திருத்தும வகையில், புது நூல்கள் ஏன் எழுதக் கூடாது? அல்லது நல்லறிவாளர்களைக் கொண்டு எழுதி ஏன் வெளியிடக் கூடாது? என்று கேட்கிறேன்? ஏன் செய்யவில்லை? முடியவில்லையா?

இவ்விதம் செய்வதுதான் நாகரீக சர்க்காருக்கு அழகு, முறை, சரியுங்கூட. இதை விடுத்து யாவற்றிற்கும தண்டனை, பறி முதல், என்ற போக்கிலே செல்வது என்ன முறை? விடுதலை யடைந்த நாட்டிலே நடை பெற வேண்டிய நல்லாட்சியா இது? தேசிய சர்க்காரா இது? அல்ல! மக்களைக் கொடுமைப் படுத்தும ஒரே கட்சியின் ஆட்சி இன்று நடக்கிறது! சுருக்கமாக, ஆனால் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இதைப் "பாசிச ஆட்சி" என்று கூறலாம். மேல் நாட்டுப்பாசிசம்பார்ப்பதற்குப் பயங்கரமான உருக் கொண்டதுதான். ஆனால் நம நாட்டுப் பாசிசம, இன்று நேற்றுமட்டுமல்ல, நெடுங்காலமாகவே புன்னகைபூத்த முகத்தோடு ஆட்சிசெலுத்துவது.

வேதனை தரும் தீர்மானம்

நேற்று உங்கள்மாநாட்டிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினீர்கள் என்று உங்கள் வரவேற்புக்குழுத் தலைவர் என்னிடம கூறினார். அதாவது! இந்த ரெயில்வே ஊழியர் மாநாடானது, "இந் நாட்டுக் கம்யூனிஸ்டுகளை அடக்கி ஒடுக்கத் தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும. ஆனால் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல போகவேண்டாம்" என்பதாகும.

இத்தகைய ஒரு தீர்மானம், இத்தகைய மாநாட்டில், நிறைவேற்றப் பட்டது. நான் உண்மையிலேயே பெரிதும் வருத்தப் பட்டேன், வேதனைப் பட்டேன் வெட்கப்பட்டேன். ஏன் அப்படிப்பட்ட தீர்மானம் செய்யவேண்டும்? கம்யூனிஸ்டுகளை ஏற்கனவே அரசாங்கம மிக்வும் கொடுமைப்படுத்தி வருகிறது. அதற்குமேல் உங்களைப்போன்ற தொழிலாளர்களே அரசாங்கத்திற்குத் தூபம்,போட்டால் நிலைமை என்னவாகும்? வருங்காலத்தில் யாரை வேண்டுமானாலும், தண்டிக்க, பழிவாங்க, அவன் 'ஒரு கம்யூனிஸ்ட்' என்று கூறிவிட்டால் போதும், அரசாங்கத்திற்கு. இது முறையா?

இன்று உங்கள்சங்கத்திற்கு அகில இந்தியத்தலைவராக இருக்கும் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணன், நானே ஒரு கம்யூனிஸ்டாக கம்யூனிஸத்தைப் பின்பற்றுபவராக ஏன் ஆகமுடியாது என்று கேட்கிறேன்? யாராயிருந்தாலென்ன தொழிலாளிகள், அடக்குமுறையை ஆதரிப்பது மிக மிகத்தவறு, முறை கெட்ட போக்குங்கூட. கம்யூனிஸ்டுகள்மேல் உங்கட்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? தொழிலாளர் நலனுக்குப்போராடும்முகாமில் இல்லாதவர்களா? போராட்டக்காலத்தில் புறமுதுகிட்டோடும் பண்புடையவரா? அல்லவே! பின் ஏன் இந்த மாச்சரியம்? இன்னும் கடுமையாக அடக்குமுறையை வீசுங்கள், என்ற வேண்டப்படாத தீர்மானம், நேற்று, உங்கள் மாநாட்டில் நிறைவேறலாமா? உண்மையிலேயே இது மிக மிக வெட்கக்கேடான செய்தி, மக்கள் முன்னே.

இந்த நேரத்தில் உங்களைப் போன்ற தொழிலாளர் மாநாடுகளில் எப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும்? புரட்சிவாடை வீச வேண்டாமா? புல்லர்களைத் தூள் தூளாக்கும் தீர்மானங்கள் இருக்கவேண்டுமே? தொழிலாளர் மீது வஞ்சம்தீர்க்காதே என்ற வீரத்தீர்மானம் வேண்டும். அடக்குமுறை ஒழிக என்று ஆர்ப்பரிக்கும் தீர்மானங்கள் இருக்க வேண்டும். பொதுக்கூட்டத்திற்குத் தடை போடாதே! விசாரணையின்றிச் சிறையில் போடாதே—விசாரணை அல்லது விடுதலை இரண்டிலொன்று கேட்கும் போக்கு, பழிவாங்குவதைக் கண்டிக்கும் பணி ஆகிய காரியங்களிலே நீங்கள் ஈடுபடவேண்டும். அடக்குமுறை இன்று உங்களுக்கில்லை- உங்களோடு கலவாத கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு இருக்கிறது. நாளை நீங்களும் அரசாங்கத்தின் கண்களில் விழலாம், உங்கள் தேவையை உரத்த குரலில் கூறிடும்போது. அதை மனதில்வைத்துப்பாருங்கள். பின்பு கூறுங்கள் நீங்கள் செய்த தீர்மானம் சரியா? பொருந்துமா? தேவைதானா? என்று.

மறந்தும் இவ்விதம் செய்தல் நல்லதன்று.

இந்நேரத்தில் கூட்டத்தின் தலைவர் தீர்மானம் அவ்வளவு கடுமையாக இல்லையென்று கூறுகிறார் உண்மை அதுவாயின் மிகமிக மகிழ்ச்சி!

ஆனால் காலையில் உங்கள் மாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் விட்டல் அவர்கள் இம்மாதிரி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம் என்று கூறினார்; அதைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். ஏன்? இந்த ஒரு தீர்மானத்தை வைத்துக் கொண்டே அகில உலகிலும் தங்கள் அடக்குமுறை நியாயம, அதனைத் தொழிலாளர்களே ஆதரிக்கின்றனர்-அது மட்டுமல்ல, இன்னும் தீவிர நடவடிக்கை வேண்டும் என்று கூறுகின்றனர், என்று பிரச்சாரம் செய்வர் ஆட்சியாளர்கள். நேரு அமெரிக்கா போகிறார் என்றால் இத் தீர்மானமும் ஏன் உடன் செல்லாது? உண்மையிலேயே திகைப்புமடைந்தேன். அதன் விளைவே நான் இங்கே இப்போது குறிப்பிட நேர்ந்தது.

நான் மறு முறையும் கூறுகிறேன் நீங்கள் எப்போதும் அவ்விதமான போக்கை மறந்தும் கைக்கொள்ள வேண்டாம் என்று.

(பிற்பகுதி நாளை வரும்)

அடக்குமுறை காணிக்கை ரூ. 1000 செலுத்தப்பட்டது

'மாலை மணி' அச்சிடப்படும் மார்க்கண்டெயில் அச்சகத்திற்கு, ரூ. 1000 ஜாமீன் தொகை அரசியலார் கேட்டிருந்தபடி, பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 9—9—49-ல் கட்டப்பட்டது.

ஈரோடு
ஸ்ரீ கிருஷ்ண டாக்கீஸில்
9-9-49-ம் தேதி முதல்
P. U. சின்னப்பா, P. கண்ணாம்பா
அஞ்சலிதேவி நடித்தது.
தாயைப் பெண்டாளவந்த தனயன் கதை.
மங்கையர்க்கரசி

'தேசியம்' ஒரே கட்சிக்குச் சொந்தமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் படித்த குமாஸ்தாக்களாகிய நீங்கள், தொழிலாளர் பிரச்சனைகளை நன்கு யோசிக்க முடியும். வயலிலே ஓயாது உழைக்கின்ற விவசாயி, சிந்தனை செய்ய முடியாது, சிக்கலான பிரச்சினை பற்றி. நேரமில்லை அவனுக்கு; உழைப்பு அதிகம் என்பதால்.

ஆலையில் வேகின்ற தொழிலாளி, அதிக நேரம் செலவிட முடியாது இத்தகைய பிரச்சினைகளிலே, ஆனால் படித்த குமஸ்தாக்களாகிய நீங்கள், கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களல்ல. உங்களுக்கு வாழ்க்கையில் ஓரளவு சவுகரியம் உண்டு. ஓய்வாக யோசிக்க முடியும் - பொறுப்பு என்ன? இன்றைய குறைகளைத் தீர்க்கவழி என்ன? என்று. -

மானம் என்றோ பறந்திருக்கும்

எனக்கு முன்னால் பேசிய தோழர் ஜி. ராஜமன்னார், தமது சொற்பொழிவிலே கூறினார், "சர்க்கார் உத்தியோகங்களில் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த உத்தியோகஸ்தர்கள்தான் இன்னும் இருக்கிறார்கள், ஆகவேதான் இன்னும் அந்த வெள்ளைக்கார காலத்துத் தர்பார் ஆட்சியே நடை பெறுகிறது" என்று. இதிலே முற்பகுதியை நான் ஏற்றுக் கொள்கிறேன் பிற்பகுதியைத் தாழ்மையோடு மறுக்கிறேன். ஆம்! இன்றைய ஆட்சியிலே இன்னும் பழைய ஆட்கள், உத்தியோகஸ்தர்கள், இருக்கத்தான் இருக்கிறார்கள். அதை முழு மனதுடன் ஒப்புக் கொள்கிறேன். உண்மை. ஆனால் அடுத்த வாசகத்தை "பழைய ஆட்கள் இருக்கிறார்கள், எனவேதான் தர்பார் ஆட்சி" என்று கூறும் போக்கை ஒப்புக்கொள்ளவில்லை. பலமாக மறுக்கிறேன்; நான் திட்டமாகக் கூறுகிறேன். 'இந்தப் பழைய ஆட்கள் இல்லாமலிருந்தால்' இந்த சர்க்காரின் மானம் என்றைக்கோ பறந்திருக்கும், என்பது திண்ணம் என்று. 'பழைய ஆட்கள்' என்று நான் குறிப்பிடும் போது, இன்றைய ஆட்சிப் பீடத்திலே அமர்ந்துள்ள என். ஜி. கோபாலசாமி அய்யங்காரையும் சேர்த்துத்தான் கூறுகிறேன்; டாக்டர் ஜான் மத்தாய், டாக்டர் அம்பேத்கார் ஆகியவர்களையும் கூட்டியே கூறுகிறேன். "பழைய ஆட்கள்" இல்லாவிட்டால், இன்றைய ஆட்சி சரிவர நடைபெறாது என்று. தோழர் ராஜமன்னார் கூறுகிறார்; "வெள்ளையனிடம் வேலை பார்த்தவர்கள்தான், இன்று சர்க்கார் உத்தியோகத்திலிருக்கிறார்கள். எனவே நான் அந்தப் பழைய தர்பார் நடைபெறுகிறது" என்று. வாதத்திற்காக அதனை ஏற்றுக் கொண்டாலும், அவருடைய வாசகத்திலிருந்து, அவரே தன்னை மறுத்துக் கொள்கிறார்.

வளைந்து கொடுப்பதுதானே வெள்ளையன் பாடம்

வெள்ளைக்காரனிடம் வேலை பார்த்தவர்கள், அவனுக்கேற்ற தர்பார் நடத்தியவர்கள் ஆவார்கள் என்றால் என்ன பொருள்? வெள்ளையனிடம், வெள்ளைக்காரனுடைய மனப்போக்கை நன்கு தெரிந்து நடப்பவர்கள். அவன் குணத்தைக் கொண்டவர்கள். என்பது தானே! இன்று அவசியமாயின, அவர்கள் இன்று தர்பாரைத் தொடர்ந்து நடத்த மாட்டார்களா. வெள்ளையனுடைய [illegible] கொள்கையான, "நெளிவு சுளுவு"களை நன்கு அறிந்திருப்பவர். அவன் குணம் அதுதானே. 'சமயத்தில் வளைந்து கொடு, சவுகரியப்படும்போது அடி' என்பது தானே அவனுடைய போக்கு, திட்டம். அதனைநன்கு அறிந்த பழைய ஆட்கள், இந்திய தேசிய சர்க்காருக்கு ஏற்றபடி தானே நடந்து கொள்வார்கள்! வாதப்படி, சரியா? தவறா? சிந்தியுங்கள்! எனவே, இன்றைய தர்பாருக்கு, தோழர் ராஜமன்னார் கூற்றுப்படி, பழைய ஆட்கள் அல்ல காரணம் என்று தெளிவாகிவிட்டது. பின்என்ன? எங்கே குறைபாடு? ஆட்சிப் பீடத்தில்தான்.

ஆட்சித் திட்டத்திலே குறை

இன்றைய ஆட்சியாளர்கள் மிகநல்லவர்கள். நாடு கூறுகிறது, நானும் கூறுகிறேன். முதலமைச்சர் பண்டித ஜவஹர் உலகமறிந்தவர்; அல்லர் என்று எக்கப்பித்தனும் கூறத்துணியானே! அவருக்கு, நாட்டுக்கும், நாட்டவர்க்கும் நல்லது செய்யும் எண்ணமில்லை என்று காப்பறையறையத் துணிவுள்ளோர் கிடையாதே! மந்திரி ராஜேந்திர பிரசாத்-மகா சாது-மறுப்பவர் யார்? கல்விமந்திரி மௌலானா அபுல்கலாம் ஆசாது, கல்விக்கடல்—கண்டிக்கவில்லை! டாக்டர் மத்தாய்-நிதி மந்திரியார்—மகாதிறமைசாலி. மறுப்பவரில்லை!

இவ்வளவு நல்லவர்கள் இருந்தும், திறமைசாலிகள் இருந்தும், நல்ல பலம் இருந்தும், நடக்கிறது 'தர்பார்' ஆட்சி, ராஜமன்னார் கூற்றுப்படி! ஏன்? எவ்வளவுதான் நல்லவர்கள் **திறமைசாலிகள் இருந்தாலும், இன்றைய ஆட்சிக்கு நல்லதொரு திட்டமில்லை ஆட்சி நடத்த. எனவே இத்தகைய அல்லல்கள், அவதிகள், "தர்பார்கள்" என்று கூறுகிறேன்.**

'தேசியம்' ஒரே கட்சிக்குச் சொந்தமா?

இன்றைய நிலைக்கேற்ப, நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, மக்கள் முன் வைத்து, மக்கள்மனம் மகிழ ஆட்சி நடத்தவில்லை, நடத்த முடியவில்லை, அல்லல்களுமடைகிறார்கள். ஏன் இந்த நிலை?

இன்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருப்போர், ஆட்சிப் பொறுப்பு அவர்களிடத்திலே அத்தனை விரைவில் தரப்படும் என்பதை எதிர்பார்க்கவில்லை. ஆரூடக்காரர்கள் கூட அதை அவர்கட்குச் சொல்ல முடியவில்லை! பிரிட்டன், கடனாளியாகவும், நோயாளியாகவும் ஆன உடனே, இவர்கள் சற்றும் எதிர்பாராத வகையில், சுமை, இந்தக் "கனம் மந்திரிகள்" வசம் இறக்கிவிடப்பட்டது. திடீரென்று விழுந்த பொறுப்பை-சுமையை அவர்களால் தாங்க முடியவில்லை, அவதிப்படுகிறார்கள். கிண்டி குதிரைப்பந்தயத்திலே "Double Tot, Trible Tot" அடித்தது என்று கூறுவார்களே அதுபோல், அடித்தது பிரைஸ் இவர்களுக்கு. சரி, கிடைத்தபொறுப்பை, மக்கள் மனப்பண்பறிந்து நடத்தவேண்டாமா? இவர்களிடம் தந்த பொறுப்பை, தாங்களே சர்வ வல்லமை பொருந்தியவர்கள் என்ற போக்கிலே, நடத்தலாமா? என்று கேட்கிறேன். ஒரே கட்சி ஆள்கிறதே, இதற்குப் பெயர்தான் தேசிய சர்க்காரா? 'தேசியம்' ஒரேகட்சியில் மட்டும் எப்படி இருக்கும், இருக்கமுடியும்?

'கட்சிப் பற்று" என்பதை ஒரு புறம் ஒதுக்கி, "நாட்டுப் பற்றை" முன்வைத்து இவர்கள் ஆட்சிசெய்ய வேண்டாமா? ஒரு கட்சிக்கே ஆட்சி என்றால், ஜன நாயக மாகுமா? அது தேசிய சர்க்கார்தான் ஆகுமா? இந்த ஜனநாயக அரிச்சுவடி அறியாது போவானேன்? மக்களுக் கேற்ற திட்டம் தீட்டி, மக்கள் முன் வைத்து, மக்கள் மனம் மகிழும் ஆட்சி நடத்த வேண்டாமா? இல்லையே? அதனால்தானே அல்லல்கள்? அவதிகள்? எல்லாம்!

நல்ல திட்டம் தீட்டினார்களா?

உழவர், ஆலைத் தொழிலாளி, மக்கள் யாவரும் நலம் பெற நல்லதொரு திட்டம் தீட்டப்பட வேண்டும், தீட்டினார்களா, மந்திரி மார்கள்? "அவகாசம் வேண்டும்" என்று கூறுவது பொருந்துமா? முறைதானா? திட்டம் தீட்டினாலும் டெல்லி மந்திரிகள் தீட்டலாம்! சென்னை மந்திரிகள் அதனைப் புரிந்து கொள்ள முற்படலாம்! நாமெல்லாம் - மக்கள் எல்லாம் அவற்றைப் பரிசீலித்து நற்சாட்சியளிக்கலாம்! பின்னர் அது நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு நன்மை பயக்கும்! அனைவருக்கும் ஆனந்தம் தரும் திட்டம் வேண்டும், ஆட்சிக்கு அதுதான் அடிப்படை இங்கே உண்டா? இல்லையே!

ஆனந்தம் அனைவருக்கும் தரும் திட்டம் என்றவுடன், பிர்லாவும் புன்னகை பூக்க வேண்டும், அதே நேரத்தில் அவரிடம் வேலை செய்யும் தொழிலாளியும்புன்னகை பூத்திட வேண்டு என்றோ. தஞ்சை மிராசுதாரும் மன மகிழ்ச்சி யடைதல் வேண்டும், அவருடைய விவசாயத் தொழிலாளியும் விம்முதலுடன் ஆடிப்பாடி மகிழ வேண்டும் என்றோ எதிர்பார்த்துத் திட்டமுற்படுதல், முரண்பட்ட விளைவைத்தான் தரும். தீட்டவும் முடியாது இத்தகைய சாக்கஸ் கம்பி வித்தையில்தான் சர்க்கார் இருக்கிறார்கள். இது நன்றா?

பொதுவுடமைப் பிரசாரம் ஏன் வந்தது?

இன்றைய நிலையில், நாட்டின் பொது மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நாட்டின் வளத்தையும், செல்வத்தையும், நல்லறிவாளர்களின் மனத்தையும், திறத்தையும், அத்துடன், மேல் நாட்டார் அளித்துள்ள விஞ்ஞானத்தையும் துணைக்கொண்டு, இயற்கை வளத்தைப்பயன் படுத்தி, நல்லதொரு திட்டம் தீட்டப்பட்டு மக்கள் மன்றத்தில்வைத்திருந்தால், நாட்டிலே, இன்று பேசப்பட்டு வரும் அளவுக்குப், பொதுஉடைமைப் பிரச்சாரம தேவைப்பட்டிராது; நடைபெறும் அளவுக்கு, நாடும்கலிந்திராது என்பது நிச்சயம். ஏழ்மை நிலை வளர்ந்திருக்காது. வளம் மிகுந்திருக்கும். அந்த நிலையில் சர்க்கார் நடத்துகின்றனரா? என்றால்—முயற்சி செய்து பார்க்கின்றனராம—முடிவு எப்போது?

'காக்கை'—அன்னம்' வாதம்!

மத்ய சர்க்கார் மந்திரிகளில ஒருவராகிய கனம் காட்கில் அவர்கள் ஒரு சில தினங்களுக்கு முன் பேசியிருக்கிறார். அதாவது இன்றைய சர்க்காரை, சர்க்காரின் திட்டங்களைக் குறை கூறுவோர், இரு பிரிவினர், காக்கை போன்றவர்கள்,—கெடுதிகள்தான், குற்றங்குறைகள்தான் அவர்கள் கண்களுக்குத் தெரிகிறது என்றும், மற்றொரு பிரிவினர் அன்னப்பட்சிகள் போன்றவர்கள் என்றும் அன்னம் பாலையும் நீரையும்பிரித்து நீரைவிட்டுப் பாலைமட்டும் பருகும் தன்மைபோல் குற்றம் விடுத்துசகுணங்களை மட்டும் காண்பவர்கள் ஆவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். பாலை மட்டும் பருகும் குழாம் டெல்லியோடுநின்றுவிடுவதோடு நீர்மட்டுந்தான்சென்னைக்குத் தரப்படுகிறது. அன்னம தற்காலத்திலில்லை, புராண காலத்தது என்பதாலோ. என்னவோ, தெரியவில்லை! இன்று 'பவளக்கொடி' சினிமாவிற்குக்கூட அன்னத்திற்குப்பதில் பெரிய வாத்தைத்தான் காட்டுகின்றனர். அன்னம் இன்று இல்லாத ஒன்று, அது வேண்டாம் நமக்கு. நாம் காக்கைகளாகவே இருப்போம். "காக்கை, குருவி எங்கள் ஜாதி" என்று கவி பாரதியாரே கூறியிருக்கிறார். 'காக்கை' இனத்திலேயே இருப்போம். காக்கை குற்றந்தான்காணும், குறைகளைத்தான் குறிக்கும் என்றால் அதில் தவறென்ன? தவற்றைத்திருத்துவதுதான் எப்படி?

வேலை நிறுத்தம்-விம்புப் போராட்டமல்ல

சர்க்கார் தொழிலாளருக்குப் பொதுவாகக் கூறும் உபதேசம், "வேலை நிறுத்தம் செய்யாதே" என்பதுதான். வேலைநிறுத்தம் செய்வது என்ன, தொழிலாளருக்குப் பிள்ளை விளையாட்டா எடுத்ததற்கெல்லாம் அதனை மேற்கொள்ள? கிடையாதே! வேலை நிறுத்தம் இல்லாத வேளைகளிலாவது ஆலைத் தொழிலாளி காலை எட்டு மணிக்குத் தொழிற்சாலைக்குச் சென்றால் மாலை ஆறு மணிக்கு வீடு திரும்புவோம் என்ற நியதி இருக்கும். குறிப்பிட்ட அளவே, வேலை நேரம், வேதனை எல்லாம். ஆனால் வேலைநிறுத்தகாலத்திலே, அப்படியில்லை. சதா வேலை, வேலை நிறுத்தம் சரிவர நடக்க. நிம்மதி கிடையாது, சதா கவலை. பக்கத்து வீட்டுக்காரன் போலீசுக்குத் தகவல் கொடுப்பானோ என்ற பயம் ஒரு புறம் — தொழிற்சாலை பக்கம போவோர்கள், தேசீயத் தோழர்களால் தங்கள் வேலை நிறுத்தத்தைக் குலைக்கக்கொண்டுபோகப் படும் ஆட்களா? என்று வேறு கவனிக்கவேண்டும். கங்காணிகளின் தாக்குதல்கள் வேறோர் புறம். பட்டினி வேதனை, மற்றோர்புறம். வெளியே ஊர்வலமாகச் சென்றால் —அது தவறு. அதற்கு ஆறுமாதம் தண்டனை — தர்பார்கள் வேறு நடக்கும். கூட்டம் நடத்தாதே —144 வது சட்டம் தாண்டவமாடும்—மீறும் நிலை வரும்—தடியால் தாக்குதல் — அதுமட்டுமா? துப்பாக்கி வேட்டுச் சத்தமும்கூட தொழிலாளரிடம் நடக்கக் காண்கிறோம்.

வேலைநிறுத்தம் தொழிலாளியின் விம்புப் போராட்டமல்ல—இரத

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

மகாத்மாகாந்தி நினைவு கல் தூண் திறப்பு விழா

நாகர்கோவிலில்

கலைவாணர் N. S. கிருஷ்ணன் —
கலைவாணி T. A. மதுரம்
ஆகியோரின் சொந்த முயற்சியில் அமைக்கப்பட்டிருக்கும்
கல்தூண் திறப்பு விழாவை 13—9—49-ல்
சென்னைப் பிரதமர் குமாரசாமி ராஜா
அவர்கள் நிறைவேற்றுவார்கள்.

மாலை நிகழ்ச்சி: தி. த. நா. காங்கிரஸ் தலைவர்
திரு. நத்தானியல் அவர்கள் தலைமையில்
"திராவிடநாடு" "மாலைமணி" ஆசிரியர்
திரு. C. N. அண்ணாத்துரை M. A.,
சொற்பொழிவாற்றுவார்கள்.

திருவாங்கூர்—கொச்சி யூனியன் முதல் மந்திரி
திரு. T. K. நாராயணப் பிள்ளை
அவர்கள் தலைமையிலும், முன்னிலையிலும்,
கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்களின்
"காந்திமகான் சரிதம்" (வில்லுப்பாட்டு) நடைபெறும்.

விழாவில் முக்கியமானவர்கள் பலரும் கலந்துகொள்வர்.
அனைவரும் வந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நாகர்கோவில், 9—9—49 } மகாத்மாகாந்தி நினைவுக் கல்தூண் குழுவினர்.

படித்துப்பாருங்கள்!

கோரநாதன் எழுதிய
கேட்பாரில்லை 2 அணா.
ஒய்யாரி (கதை) 8 ,,
(வல்லிக்கண்ணன் எழுதியது)
நரசகார கும்பல் 8 ,,

ஏஜன்ஸி கமிஷன் 25%. தபால் செலவு இலவம். புத்தகங்களை வி.பி. யில் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்தி நிலையம்,
5-B, ஒயிட் ஹவுஸ்
ஸௌராஷ்ட்ர நகர்
அக்பராபாத் P.O., சென்னை-24.

இனிய காதல் கதைகள்

மனோரஞ்சிதம் விலை: 12 அணா.
இரண்டு கதைகள் விலை: 8 அணா.
இன்ப நாட்கள் விலை: 6 அணா.

விற்பனைக் கழிவு 25%. அனுப்பும் செலவு இலவம். ரூ. 1-12-0 M.O. செய்வோருக்கு 3 புத்தகங்களையும் வி. தபாலில் அனுப்பப்படும்.
தேவைக்கு எழுதுக:—
கலையகம்,
14-A, குப்பையர் தெரு, சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy, at the Mercantile Press, 2/45. Muthumari Chetty Street, Madras-1.